கட்சி சார்பு இல்லாமல் வேறு நபர்கள் எத்தனையோ அசந்தர்ப்பம் காரணமாக உயிர் நீத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மானியத்தில் இடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 53 பேர் 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர் இழந்தார்கள் என்று சொன்னேன். இந்த 53 பேர்களும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் குறிப்பிடவில்லை. ஆக கட்சியைச் சேர்ந்தவர்கள், கட்சியைச் சேராதவர்கள், மாணவர்கள் இவர்களெல்லாம் இந்த 53 பேரிலே அடங்குவார்கள். எந்தக் கட்சியினுடைய சார்பாகவும் இல்லாமல், அவர்கள் இறந்தவர்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே உயிர் இழந்தவர்கள் என்ற அளவில், அவர்களுடைய குடும்பத்தாருக்கு இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது. இந்த அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டாயிரம் ரூபாய் தந்து வருகிறது என்று சொன்னேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இறந்தவர்களுக்கு இப்போது மானியம் வழங்குவதாக முடிவு செய்யப்பட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். உடல் ஊனம் உற்றவர்களும் இதிலே இருக்கிறார்களா? உடல் ஊனம் உற்றவர்களுக்கும் மானியம் வழங்குவதற்கான ஆலோசனை அரசிடத்திலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிறை சென்றவர்களுக்கு மானியம் வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்போது, இவர்களுடைய பெயர்களும் அறிவிக்கப்படுமானால், அவைகளையும் பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

Classifications in Grade I and Grade II Tamil Pandits

* 296 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the basis on which the classifications are made between Grade I and Grade II Tamil Pandits in schools ?

முதல் நிலை, இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்களை வகைப்படுத்துதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பள்ளிகளில் முதல் நிலை, இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் எந்த அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றனர்.

1973 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதல் நிலை, இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்கு அவர்களுடைய பதவிக்குரிய கல்வித் தகுதி, கொடுக்கப்படும் வேலை முதலியவற்றைக் கொண்டு பாகுபாடு செய்யப்படுகிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இந்தத் தகுதிகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன. குறிப்பாக எஸ். எஸ். எல். சி. படிக்காத ஒரு தமிழ் வித்வான், கல்லூரியில் எம்.ஏ. வகுப்பிற்குப் பாடம் சொல்லிக் கொடுக்கின்றார். ஆனால் அதே தமிழ் ஆசிரியர் உயர்நிலைப் பள்ளியில் உயர் வகுப்புகளுக்குள், ஒன்பது, பத்து, பதினொன்றுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்தப் பாகுபாட்டை ரத்துச் செய்து விடலாம் என்ற யோசனையை அரசு பரிசீலிக்குமா? எனக்குக் கிடைத்துள்ள விவரப்படி, 400 தமிழ் ஆசிரியர்கள் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக இருக்கிறார்கள். அரசுக்கு இதிலே பெரிய செலவு ஒன்றும் இல்லை. ஆகவே இந்தப் பாகு பாட்டை ஒழித்து விடலாம். பட்டதாரி ஆசிரியர்களிடையே பாகுபாடு இல்லை. இடைநிலை ஆசிரியர்களிடையே பாகுபாடு இல்லை. தமிழாசிரியர் இடையிலே மட்டும் இந்தப் பாகுபாடு இருக்கிறது. அதுவும் இந்தப் பாகுபாடு எந்தக் கல்வி அடிப்படையிலும் இல்லை. ஆகவே இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாகுபாடு வகுப்பைப் பொறுத்திருக்கிறது. 6. 7, 8-வது வகுப்புக்குச் சொல்லிக் கொடுக்கிறவர்கள். 9, 10, 11-க்குச் சொல்லிக் கொடுப்பவர்கள் என்ற பாகுபாடு, ஒரு வகைப் பாகுபாடு. மற்றொரு வகைப் பாகுபாடு முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் என்பது. "லேன்குவேஜ்"-ல் எல். டி., பி. டி., பி. இ. டி. அல்லது பி. ஓ. எல்., படித்து முழுமையாகத் தகுதி பெற்றிருக்கிறவர்கள் . அல்லது எஸ்.எஸ்.எல்.சி. படித்து ஓரியண்டல் டைட்டில் பெற்று பண்டிதராகப் பட்டம் பெற்றிருக்கிறவர்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறாமல் கீழே 5, 6-வது படித்து விட்டுப் புலவர் அல்லது பண்டிதர் அல்லது வித்வான் பட்டப் படிப்பு படித்திருக்கிறார்கள். இவர்களை இரண்டாம் நிலையில் வைத்திருக்கிறோம். 10-வது படித்து விட்டு மேற்கொண்டு 4 ஆண்டுகள், அதாவது 14 ஆண்டுகள் படிக்கிறவர்கள்; 5, 6-வது படித்து விட்டு 4 ஆண்டு வித்வான் படிப்பிற்குப் படித்து 9 ஆண்டுகளை மட்டும் செலவழிக்கிறவர்கள்—இவர்கள் ஒரே நிலையிலே வைக்கப்பட வேண்டுமென்பது எந்த வகையிலேயும் பொருந்தி வராது. ஆக 2-வது நிலை தமிழாசிரியர்கள் இடங்களிலே முதல் நிலைத் தகுதி பெற்றவர்கள் பணியாற்றுகிறபோது —எப்படி (Higher Grade)

இடத்தில் (Secondary Grade) ஆசிரியர்கள் பணியாற்றுகிறபோது, அவர்களுக்கு (Secondary Grade) சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறதோ, அப்படி வற்புறுத்தப் படுகிறது. அந்த வகையிலே 2,260 தமிழாசிரியர்களுக்கு முதல்நிலைச் சம்பளம் வழங்கப்படுகிற அளவிற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இன்றைக்குப் பிரச்சினையை மிகச் சுருக்கமாகச் சொன்னால், வித்வான் படிப்புக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேவையில்லை என்று பல்கலைக் கழகம் நிர்ணயித்திருக்கிறது. ஆகவே அவர்கள் வித்வானுக்குப் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இப்போது முதல்நிலை பதவி உயர்வு பெறவேண்டுமென்றால், எஸ்.எஸ். எல்.சி. தேர்வு பெற வேண்டுமென்று அரசாங்கம் விதியை வைத்திருக் கிறது. இது எந்த வகையிலே பொருத்தமாகும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தப் பாகுபாடு பொருத்தமற்றது என்று நான் சொல்லுகிறேன். ஏனென்றால் எஸ்.எஸ்.எல்.சி. தகுதி இல்லாத தமிழாசிரியர் புலவர் பட்டம் பெற்று கல்லூரியிலே எம்.ஏ. வகுப்பிற்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, இந்தப் பாகுபாட்டை நீக்குவதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பாகுபாடு வேண்டாமென்றால், பி.டி. ஆசிரியர் கணக்குக்கு அப்போது வர வேண்டும். அவர்கள் 10-வது படித்து விட்டு, 4 ஆண்டுகள் படித்து விட்டு, 14 ஆண்டு படிக்கிறார்கள். ஐந்தாவது படித்த ஒருவர் வித்வான் படித்து விட்டு, 9 ஆண்டிலே தன்னுடைய படிப்பை முடித்து விட்டு வருகிறபோது, தன்னைச் சரி சமமாகக் கருத வேண்டு மென்று சொல்வது எப்படிப் பொருந்தி வரும்? அது மட்டுமல்லாமல் எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு வருகிறவர்களுக்கு ஒரு பொது அறிவு இருக்கிறது. ஆகவே இந்தப் பொது அறிவு இல்லாமல், வெறும் வித்வான் படிப்பு மட்டும் படித்து, அகநானூறு, புறநானூறு, திருவிளையாடல் புராணம், கந்த புராணம், கம்ப ராமாயணம் போன்றவற்றைப் படித்த அறிவு உள்ள வித்துவானைக் கொண்டு சொல்லிக் கொடுப்பது என்பது எதிர் காலத்திலே எந்த வகையிலும் பொருந்திவராது. ஆனால் இரண்டாவது நிலைத் தமிழாசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் எண்ணிக்கையைப் பார்த்தால், இப்போது 10-வதிற்குக் கீழே யாரும் படிப்பதில்லை. இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டவர்களும் 10-வது படித்தவர்களாக இருக் கிறார்கள். அதற்குக் கீழே இருக்கிறவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே அவர்கள் பல ஆண்டுக் காலம் படிப்புச்

1973 மார்ச் 29]

சொல்லிக் கொடுக்க பதவியிலே இருந்திருப்பார்களானுல், ஒரு 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம் பணியாற்றி இருக்கிறவர்கள் அந்தப் பணிக்கால அடிப்படையில் முதல் நிலை ஆக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்து வருகிறது என்று குறிப்பிட்டேன். ஆனுல் இரண்டையும் ஒன்ருக ஆக்குவது என்று வருகின்றபோது, பல சங்கடங்கள் வரும். ஆகவே ஏன் அனுவசியமாக 10-வது வரையில் படிக்க வேண்டும், 5-வது வரையில் படித்து விட்டு வித்துவான் படித்து விட்டு பி.டி. அளவிற்குச் சம்பளம் நாமும் பெறலாம் என்ற நிலை எதிர்காலத்திலே வரக் கூடும். அது இவர்களுக்குப் பொருந்தி வராது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1948-ஆம் ஆண்டு ஜி.ஒ. 526 எண்ணுள்ள உத்தரவில், உயர்நிலைப் பள்ளிகளில் இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் இருக்கக்கூடாதென்றும், 15 ஆண்டுகள் பூர்த்தி பெற்றவர்கள் முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களாக அமர்த்தப்படுவார்களென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்திற்கு மாருக மேலும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் அமர்த்தப்படுகிருர்கள். அதைத் தவிர்க்க அரசாங்கம் முயலுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய கோரிக்கைகளை வைத்திருக்கிருர்கள். அதைப் பரிசீலிப்ப தாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்களில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்கள் இருப்பார்களேயானுல் அவர்களுக்கு முதல் நிலை ஊதியம் கொடுக்கப் படுகிறதென்று கூறினுர்கள். அதே போன்று பல தமிழ்ப் பண்டிதர்கள் முதல் நிலை ஊதியத்தைப் பெறுகிருர்கள். அது மாதிரியாக, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பலர் பி.டி. பட்டம் பெற்றிருக்கிருர்கள். அவர்களுக்கும் பி.டி. சம்பளம் கொடுப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன். அவர்கள் கீழ் வகுப்புகளுக்குப் போதித்தாலும்கூட, மேல் வகுப்புகளுக்குப் போதிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிருர்கள். எனவே இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலே பி.டி. ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, இவர்களை அந்த

[1973 மார்ச் 29

வேலைகளிலே அமர்த்திவிடுவது பொருத்தமாகவிருக்கும். அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தத் தமிழாசிரியர்கள் 5-வது வகுப்பு படித்திருந்தாலும், தமிழ்ப் பண்டிதர்கள், வித்வான்கள் என்ற முறையில், அவர்கள் தமிழ் இலக்கியத்தையும், இலக்கணத்தையும் கற்று, அதில் தேர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறார்கள். எனினும் அவர்கள் அந்த வேலைக்கு லாயக்கல்ல என்று கூறுவது முறையல்ல. எனவே அவர்களது கோரிக்கையை அரசு பரிசிலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன். அவர்கள் அந்த இலக்கண, இலக்கியப் பாடங்களில் தேர்ச்சியடைந்ததற்கு அரசாங்கம் சான்றிதழ் வழங்கியுள்ளதாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பார்ப்போமானால், ஆங்கிலோ—இந்தியர்களுக்குத் தாய் மொழி ஆங்கிலம். அவர்கள் 5-வது அல்லது 8-வது படித்திருந்தாலும், ஆங்கிலம் நன்றாகப் பேசுகின்ற வல்லமை பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்களைக் கல்லூரிகளிலோ அல்லது உயர்நிலைப் பள்ளிகளிலோ ஆங்கிலம் போதிக்க, ஆசிரியர்களாக வைக்க இயலுமாவென்பதை யோசிக்க வேண்டும். 5-ஆம் வகுப்புவரை படித்து, தமிழ் வித்வான்களானவர்களுக்கு, தமிழில் சொல்லிக் கொடுக்கக்கூடிய தகுதியில்லையென்று சொல்லவில்லை. 10-வது வகுப்பு வரை படிக்கும்போது, அவர்கள் உலக அறிவு பெறுகிற கல்வியைப் பெறுகிறார்கள். எனவே 4-வது வரை படித்தவர்களையும் அவர்களோடு ஒன்றாகச் சேர்க்க முடியாது. தனியாகப் படித்து 10-வது வகுப்பு தேர்ச்சி பெற்று, அவர்களை அந்தத் தகுதிக்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்புகளெல்லாம் தரப்பட்டிருக்கின்றன. ஆண்டுக் கணக்கின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் கூறியது மாதிரி, 10, 15 ஆண்டுகளாக இரண்டாம் நிலையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறவர்கள் கொஞ்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள் என்பதால், அவர்களை முதல் நிலையாகப் பாவிக்க வேண்டுமென்ற கருத்துப்படி, அந்தக் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, எதிர்காலத்திலே 6, 7, 8-வது வகுப்புகளில் கல்வி போதனையை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக, இப்போது தொடக்கப் பள்ளி நிலையிலே பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதுபோல், உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8-வது வகுப்புகளில் பணியாற்றும் செகண்டரி கிரேட்

ஆசிரியர்கள் பட்டப் படிப்பு படித்துத் தேறியவுடன், அங்கே கல்வியை ஊக்குவிப்பதற்கு, முன்னேற்றத்திற்கு அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் சம்பளத்தைக் கொடுத்து, அந்த வகுப்புகளிலேயே போதிக்க அவர்களைப் பயன்படுத்துமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அவர்கள் பி.ஏ., பி.டி. தகுதியுள்ளவர்களாகிவிட்டார்களானால், ஒவ்வொரு பள்ளியிலும் பி.டி. ஆசிரியர்களை நியமிக்கும்போது, முதற் சலுகை இவர்களுக்குத் தர பரிசீலிக்கலாம். இப்போது அதிகமாகப் படித்து பி.ஏ., பி.டி. தகுதியுடையவர்களாக ஆகும் சூழ்நிலை இருப்பதால், அதைக் கவனிக்கலாமென்று பரிசீலிக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, if the number of years is going to be taken into account to declare Second Grade Tamil Pandits as First Grade Tamil Pandits, the same plea may be put forward by Higher Grade Teachers as well as Secondary Grade Teachers. Are the Government aware of the full implications of accepting this proposal?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இனிமேல் பத்தாவது படிக்காமல் யாரையும் புலவர் வகுப்புக்கோ அல்லது மற்றவைகளுக்கோ சேர்க்கக்கூடாதென்ற முறையை ஏற்படுத்திவிட்டு, ஏற்கெனவே அந்த நிலையில் இருக்கின்ற 300 அல்லது 400 பேர்களைத் தொடர்ந்து அனுமதிப்பது நல்லதல்ல. அப்படி அனுமதிப்பதற்கான விதியை நாம் கொண்டுவர முடியாது. இப்போது 300, 400 பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னால் வந்தவர்கள் என்பதற்காக, தனிச் சலுகைகள் அளிக்கலாமேயொழிய, அதற்கு நிலையான விதியாக அமைக்க இயலாது.

Selection Grade Posts

* 297 *Q.*—THIRUVALARGAL V. ISVARMURTI, S. MUTHUSWAMY AND M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the service of the Secondary Grade Teachers under different managements is taken into account for the purpose of Selection Grade ; and

(*b*) if so, the details thereof ?